க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலும் தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலும் அதற்கான பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதைப் பயன்படுத்தினால் மார்ட்டாலிட்டி ஸீரோவாக, எந்த விதமான உயிர்ச் சேதமும் இல்லாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சென்னை பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவிற்கு நான் டிஸ் அப்ரூவல் தந்திருக்கிறேன். இதில் கொடுக்கப்பட்டுள்ள காரணங்கள் விநோதமானவையாக இருக்கின்றன.

"To give opportunities for all persons

என்று தந்திருக்கிறார்கள். அதாவது ஸீலிங் வைத்திருக்கிற காரணத்தினால் அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது என்று இந்த அரசு சொல்லுகிறது. முதலில் மதுரையில் ஸீலிங் வைத்திருக்கிறோம். ஆறு ஆண்டுகள் என்பது ஸீலிங். மூன்றாண்டுகள் அதற்கு மேல் மூன்றாண்டுகள், அதற்குப் பிறகு செனட்டில் மெம்பராக இருக்க முடியாது. ஸீலிங் வைத்து எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்கிறோம். என்று சொல்கிறார்கள். அதற்காக இந்தச் சர்க்காரைப் பாராட்டுகிறேன். ஆனால் நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மதுரை மாநகராட்சியில் மேயரது காலத்தை...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவை விவாதிக்கும் போது அதைப்பற்றி விரிவாகப் பேசுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: மேயரின் பதவிக் காலம் ஒரு ஆண்டு என்பது இரண்டு ஆண்டுகளாக ஆக்கப்பட்டது. அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். இந்துவாக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும், கிஸ்தவராக இருந்தாலும் அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற வகையில் ஒரு ஆண்டு என்று..........

1982 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேயருக்கும் செனட்டுக்கும் என்ன சம்பந்தம்!

திரு. ப. பொன்னுரங்கம் : இதை அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவை முன்னுள்ள கேள்வி—:''1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ் பல்கலைக்கழக சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்தம் தனிவிதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : : தலைவர் அவர்களே 1982 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.